பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 21 செவ்வாய்க்கிழமை 05.01.2022 கதிர் 289

## இரண்டு வாரங்களில் கொரோனா தாண்டவம்

### பூஸ்டர் டோஸைப் பெறுவது கட்டாயம் என்கின்றது பொதுச் சுகாதார சங்கம்

எதிர்வரும் இரண்டு வாரங்களில் கொரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை நிச்சயமாக அதிகரிக்கும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

☞2

# பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வடக்கில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 05

இரண்டாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொதுமக்கள் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞2

## அரிசி விலை மீண்டும் சடுதியாக அதிகரிப்பு

நாட்டரிசி ஒரு கிலோகிராம் 170 ரூபா வரையிலும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 190 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளது என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்காலத்தில் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படக்கூடும்

☞2

## பாரிய வெடிகுண்டுகளை இரும்புக்காக கடத்திச் செல்ல முற்பட்ட அறுவர் கைது!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட பாரிய இரண்டு வெடிகுண்டுகளை இரும்புக்காகக் கடத்திச் செல்ல முற்பட்ட 6 பேரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட இரண்டு பாரிய வெடிகுண்டுகள் இருந்துள்ளன.

அங்கு வேலி அமைப்பதற்காக

☞2

## நடுக்கடலில் பழுதான நெடுந்தீவு படகு; மயிரிழையில் தப்பினர் 100 பயணிகள்



(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான கடற்போக்குவரத்துச் சேவை இடம்பெற்றபோது பாரிய அசம்பாவிதம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டது.

இன்று காலை 100 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன்

☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: சந்தேகநபர் ஒருவர் மரணம்!

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 23ஆம் திகதி சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதன்பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று

☞2

## ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும்!

### பாடசாலையை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் வாயில் முன்பாக இன்று காலை 09.45 மணியளவில் பொதுமக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கு ஆளுமைமிக்க அதிபரை

☞2



## தமிழக மீனவர்கள் 12 பேர் விடுதலை!

(ந.லோகதயாளன்)

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 12 பேரையும் மன்னார் நீதிவான் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் 12 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் பயணித்த படகுகள்

☞2

## ராஜிதவுக்குக் கொரோனா



ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்னவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

☞2

## யாழில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளி ஆதவன் படுகொலையா?

### உறவினர்கள் சந்தேகம்; நீதிமன்றில் மனுத்தாக்கல்

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மர்மமான முறையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளியான மாணிக்கம் ஜெயக்குமாரின் (ஆதவன்) மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது என மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாயைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த

☞2



## ஆளுமைமிக்க அதிபரே எமக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்குமாறு கோரிக்கை விடுத்து பாடசாலையின் வாயில் முன்பாக அப்பகுதி மக்கள்மற்றும்பெற்றோர்கள்இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், கல்வித் திணைக்களமே அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு அடிபணியாதே!, கல்வித் திணைக்களமே ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும், எமது பாடசாலையின் தரத்தைக் குறைக்காதே!, கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியைத் தடுக்காதே! போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். 50 நிமிடங்கள் வரை போராட்டம் தொடர்ந்தது. (100)

## ராஜிதவுக்குக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜித சேனாரத்ன தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு வீட்டிலேயே வைத்து சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனவரி முதலாம் திகதி முதல் ராஜித எம்.பி.யுடன் தொடர்பில்இருந்தசகலரையும்தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் கிணற்றிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021.09.28 ஆம் திகதி காலை 6 மணியளவில், வழமைபோல் நடைப்பயிற்சிக்குச் செல்வதாகக்கூறி வெளியே சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை.

பின்னர் 2021.09.30ஆம் திகதி மாலை குறித்த நபர் நவாலிப் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும், இவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அப்போதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் தெரிவித்திருந்த போதிலும், குடும்பத்தினர் தமது பாதுகாப்புக் கருதி இது தொடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

இருப்பினும், இவருடைய வீட்டுக்கும் இவர் சடலமாக மீட்கப்பட்ட பகுதிக்கும் இடையில் நெடும் தூரம் காணப்பட்டதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் இவருடைய உடல் நீதிமன்றக் கட்டளையின்படி உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டது.

விசாரணைகள் இடம்பெற்று குறித்த வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படத் திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த நபர் மன நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் எனவும், அதனால் இவர் தனது உயிரை மாய்த்திருக்கலாம் எனவும் பல செய்திகள் பரப்பப்பட்டிருந்ததைத் தற்போது அறிந்த குடும்பத்தினர் அதை முற்றிலும் மறுத்துள்ளனர்.

அவர் நல்ல சுகதேகியாக இருந்தார் என்றும், தவறான முடிவு எடுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை என்றும், அவரது மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில், குறித்த மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதால், அன்றைய தினம் இவ்விண்ணப்பம் தொடர்பான நடவடிக்கைக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

உறவினர்கள் சார்பாக சட்டத்தரணி எம்.திருக்குமரன் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

மாணிக்கம் ஜெயக்குமார் (ஆதவன்) 1994ஆம்ஆண்டுமுதல்2009ஆம்ஆண்டு வரை விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்ததுடன், அரசியல் துறையின்நிதிதொடர்பானவிடயங்களில் பொறுப்பாளராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நடுக்கடலில் பழுதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திர தேவி படகு இடை நடுவில் பழுதடைந்த நிலையில் பின்னர் வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகாட்டுவான் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

சுக்கான் தடி உடைந்தமையால் இடைநடுவில்பயணிகளைவடதாரகைப் படகுக்கு மாற்ற முடியாத நிலையிலும் பல இடையூறுகள் மத்தியிலும் வடதாரகைப் படகால் இழுத்துச் செல்லப்பட்டது.

காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட மக்கள் காலை 10 மணியை அண்மித்தே குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

## உயிர்த்த ஞாயிறு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக குறித்த சந்தேகநபர் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி முதல் விளக்க மறியலில் வைக்கப்பட்டதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

## அரிசி விலை மீண்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அந்தச் சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வழமையாக ஜனவரி மாதத்தில், குறித்த ஆண்டுக்கான பெரும்போக அரிசி சந்தைக்கு கிடைக்கும்.

ஆனால், உரப் பிரச்சினை காரணமாக இந்த முறை போதியளவான அரிசி சந்தைக்குக் கிடைக்கப்பெறவில்லை என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

## பாரிய வெடிகுண்டுகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுச் சென்ற நபர் ஒருவர் வெடிகுண்டுகளை அடையாளம் கண்டுள்ளார். அதனை இன்று இரும்புக்கு விற்பதற்காக எடுத்துச் செல்ல முற்பட்டபோது புதுக்குடியிருப்பு, கைவேலி பகுதியைச் சேர்ந்த 6 பேரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சுமார் 400 கிலோகிராம் எடை கொண்ட குறித்த குண்டுகள் இரும்புக்காகக் கடத்தப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதானவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பூஸ்டர் தடுப்பூசியைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும்தெரிவித்தவைவருமாறு:-

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்தில் 14 ஆயிரத்து 135 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து டிசெம்பரில் 1,381 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். ஜனவரி 4ஆம் திகதி வரை 33 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா இறப்புகளைப் பொறுத்தவரை கடந்த வருடம் செப்டெம்பரில் 386 இறப்புகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவை படிப்படியாகக் குறைவடைந்து டிசம்பரில் 41 உயிரிழப்புகள் பதிவாகின. இந்த வருடத்தில் இதுவரை 3 கொரோனா இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியைப் பொறுத்தவரை வடக்கு மாகாணத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசியை 90 வீதமானவர்களும், இரண்டாவது டோஸ் தடுப்பூசியை 80 வீதமானவர்களும் பெற்றுள்ள நிலையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை 30 வயதுக்கு மேல் 25 வீதமானவர்களே பெற்றுள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் வடக்கில் பொதுமக்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை - என்றார்.

## தமிழக மீனவர்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று நடைபெற்றபோது நிபந்தனைகளுடன் மன்னார் நீதிவான் நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்துள்ளது.

## இரண்டு வாரங்களில் ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் எச்சரித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண -

ஒமிக்ரோன் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் விடுமுறைக் காலங்களில் மக்களின் கவனக்குறைவான நடத்தை காரணமாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

நாடு முழுவதும் பல பகுதிகளில் இருந்து ஒமிக்ரோன் நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதனால் முழு நாட்டுக்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

மறுபுறம் பொதுமக்கள் ஒமிக்ரோன் பரவலை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது அண்மைக் கால விடுமுறை நாள்களில் மக்கள் செயற்பட்டதில் தெளிவாகின்றது.

தற்போது ஒமிக்ரோன் சமூகத்தில் பரவத் தொடங்கியதால் சிந்தப்பட்ட பாலுக்காக அழுவது அபத்தமானது.

எனவே, நாட்டில் ஒரு பெரிய வெடிப்பைத் தடுக்க, பூஸ்டர் டோஸைப் பெறுவதும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதும் முக்கியமானது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக்கூடிய கனரக வாகன சாரதி தேவை
தொடர்புகளுக்கு -
0770266833
0774449705



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தற்சார்புப் பொருளாதாரம்

**நாடு மிகவும் இக்கட்டான நெருக்கடி காலத்தை எதிர்கொண்டிருக்கின்றது. இந்த இக்கட்டை எப்படி எதிர் கொள்வது என்று தெரியாமல் மக்கள் விழி பிதுங்கி நிற்கின்றார்கள்.**

**இந்தச் சிக்கலை முகம்கொண்டு சமாளித்து மீளுவதற்கான முறைமை ஒன்று குறித்து முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும், ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ் முன்மொழிந்திருக்கின்றார். பலரும் ஏற்கனவே சுட்டிக்காட்டிய விடயம் என்றாலும் இன்றைய சமயத்தில் இது மிக முக்கியமானதாகின்றது.**

**"பொருளாதாரச் சரிவும் பொருள்களுக்கான நிர்ணய விலை நீக்கமும் மக்களை வாழ்வாதார ரீதியாகப் பாரிய அளவில் பாதித்துள்ளன. இதனால் மரக்கறி வகைகள் உள்ளடங்கலாக அடிப்படை உணவுப் பொருள்கள் நாளுக்கு நாள் விலை அதிகரித்த வண்ணம் உள்ளன.**

**"இந்தப் பொருளாதார அச்சுறுத்தலில் இருந்து மக்கள் ஓரளவு விடுதலை பெற ஒரேவழி தற்சார்புப் பொருளாதாரத்தை ஒவ்வொரு குடும்பமும் கூட்டாகக் கையில் எடுக்க வேண்டும். அதற்கு சாதகமான சூழல் காணப்படுகின்றது". – என்று குறிப்பிடும் சபா குகதாஸ் இந்தத் தற்சார்புப் பொருளாதாரம் தமிழ் மக்களுக்கு – வன்னி மக்களுக்கு – புதியதல்ல என்ற உண்மையையும் சுட்டுகின்றார்.**

**"யுத்த காலத்தில் வன்னியில் போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டு, முடக்கப்பட்டு, முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு, கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து பொருள்கள் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏறத்தாழ எட்டு வருடங்கள் காணப்பட்ட போது அந்த மக்கள் தற்சார்புப் பொருளாதாரம் மூலமே தாக்குப்பிடித்தனர். மரக்கறிகள், அரிசி, பால், முட்டை, பழங்கள், இறைச்சி வகைகள், மீன், மூலிகை மருந்துகள், கைத்தறி நெசவு, மட்பாண்டக் கைத்தொழில் மற்றும் ஏனைய சுய தொழில்கள் எல்லாம் வன்னி மக்களின் சிறப்பான வாழ்க்கைத் தரத்தையும் சேமிப்பையும் உருவாக்கின.**

**"ஆகவே, எல்லோரும் சிந்தித்து நீங்களும் வாழும் இடத்திலே சிறந்த தற்சார்புப் பொருளாதாரத்தை உருவாக்கி, அதீத விலை ஏற்றத்தைத் தடுப்பதுடன் நாட்டின் உள்ளகப் பொருளாதாரத்தையும் குடும்ப பொருளாதாரத்தையும் பாதுகாப்போம்" – என்று அவர் அழைப்பு விடுக்கின்றமை இந்த நேரத்துக்குரிய – சமயத்துக்குரிய – மிகச் சரியான வழிகாட்டுதல்.**

**உதாரணத்துக்கு, தற்சார்பு பொருளாதாரத்துக்கு அமைய வீட்டுக்கு பத்து , இருபது மிளகாய்க் கன்று நட்டிருப்போமாயின் இன்று கிலோ ஆயிரத்து இரு நூறு ரூபாவை எட்டியிருக்கும் பச்சை மிளகாய்த் தேவையை வீட்டிலேயே நாம் பூர்த்தி செய்திருக்க முடியும்.**

**வன்னி மக்களுக்கு இது புதிதல்ல. முழு பொருளாதார முற்றுகைக்கு மத்தியில் – பிற எரிபொருள்கள், மின்சாரம் எல்லாவற்றுக்கும் வாய்ப்பில்லாத சமயத்தில் – வெறுமனே மண்ணெண்ணெயை மட்டும் வைத்துக் கொண்டு எட்டு ஆண்டுகளுக்கு மேல் தற்சார்புப் பொருளாதாரத்தைத் கட்டி எழுப்பி, செயலில் நிரூபித்துக் காட்டியவர்கள் அவர்கள்.**

**அப்போது விவசாயத்துக்கு யூரியா கூட அனுமதிக்கப்படவேயில்லை. ஆனால், வன்னி விவசாயிகள் துவண்டுவிடவில்லை. உடல் ஆரோக்கியத்துக்கு வலுவூட்டும் சேதன உற்பத்திகளை – பசுமை அறுவடையை – வன்னி மக்களுக்கு வழங்கி, அவர்களின் உடல் நலத்தையும் வலுவையும் பேணினர்.**

**கொரோனாத் தொற்றுப் பேரிடர் 2020இன் முற்பகுதியில் தாக்கத் தொடங்கிய போதே இந்த தற்சார்புப் பொருளாதாரம் பற்றி பேசத் தொடங்கிவிட்டோம். ஆனால், இன்னும் அது பேச்சளவிலேயே நிற்பது போலத் தோன்றுகின்றது. அதையும் தாண்டி அவ்விடயத்தைப் பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு வீடும் களத்தில் இறங்குவது இன்று காலத்தின் கட்டாயமாகும்.**

# மோடிக்குக் கடிதமனுப்பும் ரெலோவின் முயற்சியை குழப்புபவர் யாரானாலும் விலக்கிவைக்கவேண்டும்!

## வினோநோகராதலிங்கம் எம்.பி. திட்டவட்டம்



இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்புவதற்காக ரெலோ எடுத்த முயற்சியிலிருந்து யாராவது பின்வாங்க விரும்பினால் அல்லது கையொப்பம் இட மறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலத்தி வைத்துவிட்டு அந்தவரைபைக் கையொப்பம் இட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம் என நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

அனைத்து கட்சிகளும் இணைந்து தயாரித்த வரைவை தமிழரசுக்கட்சி முற்றாக நிராகரிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா இன்னும் ஓரிரு நாள்கள் பிந்தினாலும் கூட இறுதி வரைவைத் தயாரித்து அனைவரும் கையொப்பம் இட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதாக உறுதிமொழி அளித்துள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் யார் கையொப்பம் இடுவது, யாரைத் தவிர்ப்பது, யார் விலகிக்கொள்வார்கள் என்பது இன்னும் ஓரிரு நாள்களில் தெரியவரும். ஆயினும் தமிழீழ விடுதலை இயக்கம் எடுத்த முயற்சியை ஒரு போதும் கைவிடப்போவதில்லை.

இந்த முயற்சியிலிருந்து யாராவது பின்வாங்க விரும்பினால் அல்லது கையொப்பம் இடமறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலத்தி வைத்துவிட்டு இந்த வரைவைக் கையொப்பம் இட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம்.

வார்த்தை பிரயோகங்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு தமிழரசுக் கட்சி, ரெலோ எடுத்த முடிவிற்குப் பின்னால் நாங்கள் செல்வதா என்ற சிறுபிள்ளைத்தனமான அல்லது தமிழ் மக்களை ஏமாற்ற நினைக்கின்ற இந்தச் செயற்பாட்டை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் விளைவுதான் 13 ஆவது திருத்தம். ஆகவே, ஒன்றுக்கொன்று முடிச்சுப்போட்டு அதுவேறு இதுவேறு, தலைப்பு வேறு, வார்த்தை பிரயோகங்கள் வேறு என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமானது.

இந்தியாவின் பங்களிப்பில்லாமல் எமது அரசியல் ரீதியான பிரச்சினைக்கு நிச்சயமாக நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப்போவதில்லை. அதை உணர்ந்து அனைத்துத் தமிழ்த் தேசியக்கட்சிகளும் செயற்படவேண்டும்.

அந்தவகையிலேயே இந்த முயற்சியை எடுத்துள்ளோம். இது நிச்சயம் வெற்றிபெறும். இந்தவிடயத்தில்எந்தவோர்ஆலோசனையும் இந்தியாவிடமிருந்து நாம் பெறவில்லை. இந்தியா எமக்கு எந்தவித அழுத்தங்களையும் வழங்கவில்லை.

ஆனால் நாம் பாதிக்கப்பட்ட இனம் என்ற வகையில் கடந்த காலங்களில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு வழியிலோ எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள் என்ற ரீதியில், அவர்களால் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஒப்பந்தம் என்ற ரீதியில் அழுத்தங்கள் என்பதற்கு அப்பால் தமிழ்மக்களின் விடுதலைக்காகச் செய்கின்ற பெரிய கைங்கரியமாக இதனைப் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# முல்லையில் மாணவிகள்மீது பாலியல் தொந்தரவு கைதான ஆசிரியர் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

முல்லைத்தீவில் பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கடந்த 24.12.2021 அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை சிறுமிகள் மீது ஆசிரியர் பாலியல் துஷ்பிரயோக முயற்சி தொடர்பில் சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பிரிவிற்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாரால் இருந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் விசாரணைகளின் பின் 25.12.21 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது 04.01.2022 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று (செவ்வாய்க்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது எதிர்வரும் 18.01.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இராஜாங்க அமைச்சில் இருந்து ஒட்டோவில் வீடுதிரும்பினார் சுசில்



ஜனாதிபதியால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சில் இருந்து ஒட்டோவில் வீடு திரும்பியுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிரான அவரது சமீபத்திய விமர்சனக் கருத்துகளுக்குப் பின்னர் சுசில் பிரேமஜயந்த உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்று கல்வி அமைச்சிற்கு சென்றிருந்த அவர், ஆவணங்களை எடுத்துக்கொண்டு அமைச்சில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறினார்.

இதன்போது இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் ஒப்படைத்திருந்த காரணத்தால் அவர் ஒட்டோவில் வீடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால் பதிலடி கொடுக்குமாம் அமெரிக்கா

ரஷ்யா தனது மேற்கத்திய சார்பு அண்டை நாடு மீது படையெடுக்க முயற்சித்தால், வொஷிங்டனும் அதன் நட்பு நாடுகளும் தீர்மானமாக பதிலளிப்பார்கள் என்று வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு தொலைப்பேசி உரையாடலின் போது உறுதியளித்தார்.

உக்ரைனுடனான ரஷ்யாவின் எல்லையில் பதற்றங்களுக்கு மத்தியில் பைடன் ஒரு மாதத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் இரண்டாவது உரையாடலை நடத்திய சில நாட்களுக்குப் பிறகு இந்த கருத்து வெளிவந்துள்ளது.

ஜனவரி 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் ஜெனீவாவில் அமெரிக்க மற்றும் ரஷ்ய உயர் அதிகாரிகள் நெருக்கடி குறித்து விவாதிக்க உள்ளனர்.

ரஷ்யா - நேட்டோ சபையில் பேச்சுவார்த்தை மற்றும் ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் கூட்டமும் நடைபெற உள்ளது.

அந்த சந்திப்புகளுக்கு முன்னர் ரஷ்யர்கள் நெருக்கடியைத் தணிக்க நடவடிக்கை எடுப்பது முக்கியம் என்று புடினிடம் கூறியதாக பைடன் கூறியுள்ளார்.





## சீன சந்தையில் தீ விபத்து: ஒன்பது பேர் உயிரிழப்பு!

சீனாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான டேலியன் நகரில் உள்ள பிரபலமான சந்தையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில், தீயணைப்பு வீரர் ஒருவர் உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 5 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர். அவர்கள் 5 பேரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சந்தைக்கு கீழே நிலத்தடியில் இருந்து தீ பரவியதாக கூறப்படுகிறது. இந்த தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் ஏராளமான தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

ஆனால், காற்றின் வேகம் காரணமாக தீ மேலும், பரவியதால் தீயை அணைப்பது தீயணைப்பு வீரர்களுக்கு சவாலாக இருந்தது. எனினும் சுமார் 3 மணி நேரம் போராட்டத்துக்குப் பின் தீயை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரிய வராத நிலையில், இது குறித்து தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகிறது.

## இம்ரான்கானின் 2ஆவது மனைவியின் கார் மீது துப்பாக்கிச் சூடு!



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இரண்டாவது மனைவி ரீஹம் கான். இம்ரான் கானுக்கும் ரீஹம் கானுக்கும் 2014ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. பின்னர் அடுத்த ஆண்டே (2015) ரீஹம் கானும் இம்ரான்கானும் விவாகரத்து செய்துகொண்டனர்.

ரீஹம் கான் தனது முதல் கணவர் இஸ்ஜாஸ் ரீஹம் என்பவரை 1993ஆம் ஆண்டு திருமணம் செய்து, பின்னர் 2005 ஆம் ஆண்டு விவாகரத்து செய்தார். இதனைத் தொடர்ந்து இம்ரான் கானை ரீஹன் கான் 2014இல் திருமணம் செய்து 2015 இல் விவாகரத்து செய்தார்.

இந்நிலையில், பத்திரிக்கையாளரான ரீஹன் கான் நேற்று தனது உறவினர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு காரில் வீடு திரும்பிய போது துப்பாக்கிச்சூடு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இஸ்லாமாபாத்தின் ஷாம்ஸ் காலணி பகுதியில் காரில் சென்றுகொண்டிருந்தபோது ரீஹன் கான் சென்ற காரை மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இடைமறித்தனர். அந்த நபர்கள் ரீஹன் கானின் கார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில், அதிர்ஷ்டவசமாக ரீஹன் கானுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த துப்பாக்கிச்சூடு தாக்குதலால் அதிர்ச்சியடைந்த ரீஹன் கான் காரை நிறுத்தும்படி கூறினார். மேலும், அவரின் பாதுகாவலர்களும் காரில் இருந்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரீஹனின் காரை இடைமறிந்த அவர்களை துப்பாக்கிமுனையில் காரை சிறைபிடித்தனர். பின்னர் சிறிது நேரம் கழித்து துப்பாக்கிச்சூடு நடத்திய அந்த இருவரும் பைக்கில் தப்பிச்சென்றனர்.

தன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு தாக்குதலை தொடர்ந்து ரீஹம் கான் தனது முன்னாள் கணவரும் பாகிஸ்தான் பிரதமருமான இம்ரான் கானை கடுமையாகச் சாடியுள்ளார்.

இது தொடர்பாக ரீஹம் கான் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், எனது உறவினரின் திருமண நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு திரும்பியபோது எனது கார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எனது காரை துப்பாக்கி முனையில் இடைமறித்தனர். நான் இப்போது தான் வேறு காருக்கு மாறியுள்ளேன்.

எனது தனிப்பாதுகாவலரும், சாரதியும் அந்த காரில் இருந்தனர். இது தான் இம்ரான்கானின் புதிய பாகிஸ்தானா? கோழைகள், குண்டர்கள் மற்றும் பேராசைக்காரர்கள் நிறைந்த நாட்டிற்கு வரவேற்கிறோம்' - என்றார்.

## தாக்குதலில் இருந்து தப்பினார் ஹெய்ட்டி பிரதமர்!



கரீபியன் நாடான ஹெய்ட்டி பிரதமர் ஏரியல் ஹென்றியைக் கொலை செய்யும் நோக்குடன் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து அவர் தப்பியுள்ளார் என பிரதமரின் அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

218ஆவது சுதந்திர தின விழாவை ஒட்டி வடக்கு நகரமான கோனைவ்ஸில் உள்ள ஒரு தேவாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் பங்கேற்றிருந்த வேளை, அவரை இலக்குவைத்து ஆயுததாரிகள் சரமாரி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய வேளை பிரதமர் ஏரியல் ஹென்றி மற்றும் அவரது குழுவினர் வாகனத்தை நோக்கி ஓடிச் சென்று பதுங்கிக்கொண்டமை சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள வீடியோ காட்சிகளில் காண முடிகிறது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும் இருவர் காயமடைந்தார் எனவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரதமர் ஹென்றியைக் கொலை செய்யும் நோக்குடன் தாக்குதல் நடத்தியவர்களைத் தேடிக்கைது செய்யும் நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டதில் இருந்து ஹெய்ட்டியில் அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அரச தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பும் கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் பிரதமர் மீதான தாக்குதல் பாதுகாப்பு குறித்த கவலைகளை மேலும் அதிகரித்துள்ளது.



## தாய்வானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

கிழக்கு தாய்வானில் 6.2 ரிக்டர் அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை 5:46 மணிக்கு ஏற்பட்ட இந்த நில நடுக்கம் 20 வினாடிகள் நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், பரவலான சேதம் அல்லது காயங்கள் பற்றிய உடனடி அறிக்கைகள் எவையும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானின் தீயணைப்பு சேவை, லிஃப்ட்களில் சிக்கிய ஒரு சிலரை மட்டும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். பெரிய அளவில் சொத்து சேதம் ஏதும் ஏற்படவில்லை

இந்தநிலநடுக்கம்தலைநகர்தைபேயில்நிலநடுக்கம்உணரப்பட்டது. கடலோர நகரமான ஹுவாலினுக்கு கிழக்கே 64 கிலோமீற்றர் தொலைவில் கடலில் மையம் கொண்டிருந்தது.

கடந்த 2018ஆம் ஆண்டு இதே பகுதியில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 17பேர் உயிரிழந்தனர். 300பேர் காயம் அடைந்தனர்.

# தமிழகத்தில் புதிய கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்றும் ஆலோசனை

உருமாறிய ஒமிக்ரோன் வகை கொரோனாத் தொற்று பரவலானது இந்தியாவிலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் ஒமிக்ரோன் பாதிப்பை கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் ஏற்கனவே பல்வேறு கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ள நிலையில், பொங்கல் கொண்டாட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், கொரோனா தடுப்பிற்கான புதிய கட்டுப்பாடுகள் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மீண்டும் ஆலோசானை நடத்தியிருக்கிறார். சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் இறையன்பு, சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் வைத்தியர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆகியோரோடு வருவாய்த்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கொரோனாப் பரவல் அதிகரித்து வருவதால் இரவு நேர ஊரடங்கை அமல்படுத்துவது, பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு புதிய கட்டுப்பாடுகளை விதிப்பது, விழாக்களில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கட்டுபாடுகள் விதிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளை தவிர மற்ற மாணவர்களுக்கு விடுப்பு அல்லது இணைய வழியில் வகுப்புகள் நடத்தப்படத் தீர்மானிக்கப்படலாம் என்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## கோடிக்கணக்கில் பண மோசடி செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கைது

தமிழகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அரசுத் துறையில் வேலை வாங்கித்தருவதாக கூறி பல கோடி ரூபா மோசடி செய்ததாக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது விருதுநகர் பொலிசார் வழக்கு பதிவு செய்திருந்தனர். இவ்வழக்கில் முன் பிணை வழங்க கோரிய ராஜேந்திர பாலாஜியின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து அவர் தலைமறைவாகியிருந்தார்.

ராஜேந்திர பாலாஜியை பிடிக்க 8 தனிப்படைகள் அமைத்து பொலிஸார் தேடி வந்தனர். அவருக்கு நெருக்கமானவர்களிடமும் பொலிஸார் விசாரித்து வந்தனர். மேலும் சைபர் கிரைம் பொலிஸார் மூலம் ராஜேந்திர பாலாஜியுடன் நெருங்கிய தொடர்புடைய நபர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் கைப்பேசி எண்களும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



ராஜேந்திர பாலாஜி வெளிநாடுகளுக்கு சென்று விடக்கூடாது என்பதற்காக விமான நிலையங்களுக்கு அவதானிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்தன. ராஜேந்திர பாலாஜியின் 6 வங்கிக்கணக்குகளும் முடக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த 20 நாள்களாக தலைமறைவாக இருந்த ராஜேந்திர பாலாஜியை ஒசூரில் வைத்து அவர்கள் கைது செய்துள்ளனர். ராஜேந்திர பாலாஜியுடன் அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஐயப்பனுக்கு பதினெட்டாயிரம் நெய்த் தேங்காய் அபிஷேகம் சபரிமலை வரலாற்றில் முதல்முறையாக தனி நபரின் நேர்த்தி

சபரிமலை ஐயப்பனுக்கு நெய்யபிஷேகம் செய்வது பக்தர்களின் மிக முக்கியமான வழிபாடு ஆகும். இதற்காக சபரிமலைக்கு வரும் ஐயப்ப பக்தர்கள் நெய் நிறைக்கப்பட்ட ஒன்று அல்லது 2 தேங்காய்களை இரு முடிக்கட்டுடன் சுமந்து வருவார்கள். சன்னிதானத்தில் அந்தத் தேங்காயை உடைத்து அதில் உள்ள நெய்யை சேகரித்து ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வது வழக்கம்.

ஆனால் கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த ஐயப்ப பக்தர் ஒருவர், தான் நினைத்த காரியம் ஐயப்பன் அருளால் வெற்றிகரமாக நடந்து முடிந்ததைத் தொடர்ந்து 18 படிகள், 18 மலைகளை தியானித்து, நேர்த்தியாக பதினெட்டாயிரம் நெய்த் தேங்காய் அபிஷேகம் செய்ய வேண்டியிருந்தார்.

அதன்படி பதினெட்டாயிரம் தேங்காய் மற்றும் அதற்குத் தேவையான நெய் ஆகியவற்றை அவர் பார ஊர்தி மூலம் பம்பைக்கு அனுப்பிவைத்தார். மேலும், நெய்யபிஷேகத்திற்கான கட்டணமாக 18 லட்சத்திற்கான காசோலையையும் தேவஸ்தான செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் பம்பை வந்து சேர்ந்த பதினெட்டாயிரம் தேங்காய் மற்றும் நெய்யினை தேவஸ்தான தலைவர் அனந்த கோபன் பெற்றுக்கொண்டார். பின்னர் தேவஸ்தான ஊழியர்களின் உதவியுடன் தேங்காயில்



நெய்யை நிரப்பும் பணி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நெய் நிரப்பப்பட்ட தேங்காய்கள் வாகனம் மூலம் சன்னிதானத்துக்குக் கொண்டு வரப்பட்டன. இன்று காலை அந்த குறிப்பிட்ட பக்தரின் சார்பில் பதினெட்டாயிரம் நெய்த் தேங்காய்களையும் உடைத்து ஐயப்பனுக்கு அபிகேம் நடத்தப்பட்டது.

சபரிமலை வரலாற்றில் ஒரே பக்தர் பதினெட்டாயிரம் நெய்த் தேங்காய்களை ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வது இதுவே முதல் முறை என்று திருவிதாங்கூர் தேவஸ்தான செயலாளர் கிருஷ்ணகுமார வாரியர் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்ல விவகாரம் அ.தி.மு.க. தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான போயஸ் தோட் டத்தில் உள்ள வேதா நிலையத்தை அவரது நினைவு இல்லமாக மாற்றி அ.தி.மு.க., ஆட்சிக் காலத்தில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.



இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றில், ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா, மகன் தீபக் ஆகியோர் தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி, மெரினா கடற்கரையில் 80 கோடி செலவில், நினைவிடம் கட்டப்பட்டுள்ள நிலையில், மற்றொரு நினைவு இல்லம் அமைக்கத் தேவையில்லை என்று தெரிவித்து, முன்னைய அரசாணைகளை ரத்துச் செய்தார். மேலும், வேதா நிலையத்தின் சாவியை தீபா மற்றும் தீபக்கிடம் ஒப்படைக்கவும் உத்தரவிட்டார். இதனையடுத்து, வேதா இல்லத்தின் பொறுப்பு, தீபா மற்றும் தீபக்கிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதற்கிடையில், ஜெயலலிதாவின் வேதா நிலையத்தை நினைவு இல்லமாக மாற்றியதை ரத்துச் செய்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றில் அ.தி.மு.க.வின் ஜெயலலிதா நினைவு இல்ல அறக்கட்டளை உறுப்பினர் சி.வி.சண்முகம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் அமர்வில் விசாரிக்கப்பட்டு வந்து, இன்று தீர்ப்பு வெளியாகியுள்ளது.

அதில், பொது நோக்கமின்றி அரசியல் காரணத்திற்காகவே ஜெயலலிதா இல்லம் கையகப்படுத்தப்பட்டது என்றும், ஜெயலலிதாவுக்கு இரண்டாவது நினைவிடம் என்பது தேவையற்றது என்ற தனி நீதிபதியின் கருத்தில் தவறில்லை எனவும் உயர்நீதிமன்றட்டு அமர்வு கருத்துத் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து, ஜெயலலிதாவின் வேதா நிலையத்தை நினைவு இல்லமாக மாற்றியதை ரத்துச் செய்ததை எதிர்த்து அ.தி.மு.க. தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது. இந்த உத்தரவையும் எதிர்த்து அ.தி.மு.க தரப்பில் மேல்முறையீடு செய்யப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.



## இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு ஐம்பத்தெட்டாயிரத்தையும் தாண்டியது

இந்தியாவில் கொரோனாவின் தினசரி பாதிப்பு தொடர்ந்து ஏறுமுகம் கண்டு வருகிறது. நேற்று முன்தினம் 33 ஆயிரத்து750 பேருக்கும், நேற்று காலைவரையான 24 மணி நேரத்தில் 37 ஆயிரத்து379 பேருக்கும் கொரோனா உறுதி செய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில், இன்று காலைவரையான அதற்கு முன்னையதான 24 மணி நேரத்தில் இந்தியா முழுவதும் 58 ஆயிரத்து097 ஆக தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு 3கோடியே 50 லட்சத்தை தற்போது தாண்டியுள்ளது. கொரோனா தினசரி பாதிப்பு வீதம் 4.18% ஆகவும் அதிகரித்துள்ளது. ஒரே நாளில் கொரோனாவுக்குப் பலியானோரின் எண்ணிக்கை 534 ஆகியுள்ளது. அத்தோடு, இந்தியாவில் கொரோனாவால் இறந்தோரின் மொத்த எண்ணிக்கை 4லட்சத்து 82 ஆயிரத்து 551 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் இதுவரை 2ஆயிரத்து135 பேருக்கு ஒமிக்ரோன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் திரிவின் தொற்றில் இருந்து 828 பேர் குணமடைந்த நிலையில் 1,307 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தரவுகள் கூறுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண் சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு



மட்டக்களப்பு நகர் பகுதியான அரசடியில் பகுதியில் கடந்த 20–12–2021 ஆம் திகதி கொடூரமாக கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.சி றிஸ்வான் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதேவேளை கொலை செய்யப்பட்ட பெண்ணின் கொலை சம்பவத்தில் கொலை சந்தேகநபர்களின் வாக்கு மூலத்தை பதிவு செய்வதற்காக அவர்கள் மன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மேலும், உயிரிழந்த பெண்ணின் கணவரிடம் பொலிஸார் சில அறிக்கைகளைக் கோரியிருந்தனர். சாட்சிகளிடம் வாக்குமூலம் நேற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வழக்கு எதிர் வரும் 11–01–2022 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த கொடூர படுகொலை தொடர்பில் ஊடகங்களுக்கு கணவன் தெரிவிக்கையில், தனது மனைவியின் கொலைக்கான நீதியினை கடவுளும் நீதிமன்றமும் வழங்கும் என நான் நம்புகின்றேன்.

எனது மனைவியின் இழப்பை என்னால் எவ்வாறு விவரிப்பது என்று முடியாமலிருக்கின்றது. நேற்று 16 நாள்கள் கடந்தும் நாங்கள் மிகவும் வேதனையுடன்வாழ்ந்துவருகின்றோம்.

இதற்கான நீதியினை நீதிபதி பெற்றுக்கொடுக்க வேண்டும் இதே போன்ற சம்பவங்கள் மாவட்டத்தில் இனி ஒருபோதும் இடம்பெற இடமளிக்கக்கூடாது.

ஊடகங்களும் இந்த செய்தியை மக்கள்மத்தியில்கொண்டுசெல்வதற்கு உதவி செய்து கொண்டிருக்கின்றீர்கள் எனது மனைவி உயிரோடு வரப்போவதில்லை ஆகவே எனது மனைவியின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மூதூர் பிரதேச சபைக்கு உறுப்பினராக வை.எஸ்.முஹம்மட் சிஹான் நியமனம்



கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேசிய காங்கிரஸின் சார்பில் போட்டியிட்ட வை.எஸ். முஹம்மட் சிஹான் மூதூர் பிரதேச சபை உறுப்பினராக தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் முன்னிலையில் சத்தியப்பிரமாண ம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் சிரேஷ்ட பிரதி தலைவர் வைத்தியர் ஏ. உதுமாலெப்பை, தேசிய அமைப்பாளர் வைத்தியர் வை.எஸ்.முஹம்மட் ஸியா, மூதூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ஜே.எம்.சுக்ரி, எஸ்.டீ ஜஹ்பர், திருகோணமலை மாவட்ட தேசிய காங்கிரஸின் பொருளாளர் எஸ்.நபீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மூதூர் பிரதேச சபைக்கு கிடைத்த ஆசனத்தை வருடம் ஒருவருக்கு என்ற ஏ.எல்.எம். அதா உல்லா அவர்களின் வாக்குறுதிக்கு அமைய மூதூர் பிரதேச சபை உறுப்பினராக இருந்துவந்த தோப்பூர் பிரதேசத்தை சேர்ந்த எஸ்.டீ . ஜௌபர் அண்மையில் தனது பதவியை தாமாக முன்வந்து இராஜினாமா செய்திருந்தார். அந்த வெற்றிடத்தை நிரப்ப புதிய உறுப்பினராக வை.எஸ்.முஹம்மட் சிஹான் மூதூர் பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டு கிழக்கு வாசலில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



# வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலே சாவு

ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிள்மோதி நேற்று மாலை 6 மணியளவில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்து இடம்பெற்றவேளை அவ்வீதி வழியேசென்ற வாகனமொன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கெமராவில் விபத்து இடம்பெற்ற காட்சிகள் பதிவாகியுள்ளன.

குறுக்கு பாதையில் இருந்து பிரதான வீதிக்கு நுழைந்த ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஓட்டோவைச் செலுத்தியவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 68 வயதுடைய நாகப்பன் ராமையா என்பவரே உயிரிழந்தவர். சந்திவெளி பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மரணமடைந்தவர் பேக்கரி உரிமையாளராவார். இவர் ஓட்டோவில் கடைத் தெருவிற்குச்சென்ற வேளை விபத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.



# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 51 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு உதவுதலை நோக்காகக் கொண்டு மாணவர்களுக்கு 22 சமூக சேவைஅமைப்புக்களினால் கற்றல் உபகரணங்கள், புத்தக பை வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் ஹனீபா தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தாய், தந்தைகளை இழந்த, சமூர்த்தி பெறுகின்ற தெரிவு செய்யப்பட்ட 70 மாணவர்களுக்கு முதற்கட்டமாக இக்கற்றல் உபகரணங்கள், புத்தக பை என்பன வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், உதவி பிரதேச செயலாளர் யு.எம்அஸ்லம் , கணக்காளர் ஐ.எம் பாரீஸ், சமூகசேவை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர். மேலும் இதற்காக உதவிய 22 சமூக சேவை அமைப்புக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஐயாயிரம் மரக் கன்றுகளை நடும் வேலைத்திட்டம்

பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளரின் பணிப்புரைக்குஅமைவாக கிழக்கு மாகாணம் பூராகவும் ஐயாயிரம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் காரைதீவு பிரதேச செயலகத்தின் செயலாளர் சி.ஜெகராஜனின் வழிகாட்டலின் கீழ் காரைதீவு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.



இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயல உதவி பிரதேச செயலாளர் செ.பார்த்திபன், பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஜெ. ரகுபதி, உ.சுபராஜ், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வே.அரவிந்தன் மற்றும் பயிலுனர் பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# நியூஸிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷ் அபார வெற்றி பெற்று சாதனை!

நியூஸிலாந்துடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில்வெற்றிபெற்றபங்களாதேஷ் அணி வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறது. இதன் மூலம் தொடர்ச்சியாக உள்நாட்டில் 17 டெஸ்ட் போட்டிகளில் தோற்காதிருந்த நியூஸிலாந்து அணியின் தொடர்பயணம் முடிவுக்கு வந்தது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி முதல் இன்னிஸிற்காக 328 ஓட்டங்களை பெற்றது. டெவொன் கொன்வே 122 ஓட்டங்களையும், ஹென்றி நிக்கோல்ஸ் 75 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் சொரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் இருவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 458 ஓட்டங்களைபெற்றுஆட்டமிழந்தது. மொமினுல் ஹக் 88, லிட்டொன் தாஸ் 86 ஓட்டங்களைப் பெற்றனர். நியூஸிலாந்தின் ட்ரென்ட் போல்ட் 4 விக்கெட்டுகளையும், நெய்ல் வக்னர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

130 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி, சகல விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. வில்யங் 69 ஓட்டங்களை எடுத்தார். பங்களாதேஷ் அணியின் எபடொட் ஹொசைன் 6 விக்கெட்டுகளையும், தஸ்கின் அஹமட் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 40 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்தனதுஇரண்டாவது இன்னிங்சில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கையடைந்துவரலாற்றுவெற்றியைப் பதிவுசெய்தது. இந்தப் போட்டியின்சிறப்பாட்டக்காரராக பங்களாதேஷ் அணியின் எபடொட்ஹொசைன்தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டி வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



# ஆஷஸ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் முதல்நாள் மழையினால் பாதிப்பு

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 4ஆவது போட்டியின் முதல்நாள் ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலியா 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 126 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஆஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில், 3 டெஸ்ட் போட்டிகள் ஏற்கனவே முடிவடைந்துள்ள நிலையில் 3 போட்டிகளிலும் வெற்றிபெற்று ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

இந்தநிலையில், இரு அணிகளும் மோதும் 4 ஆவது ஆஷிஸ் டெஸ்ட் போட்டி மெல்பர்ன் மைதானத்தில் இன்று ஆரம்பமாகியது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணியின் கப்டன் பட் கமின்ஸ் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோனர் 30 ஓட்டங்களையும் ஹரிஸ் 38 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். மழையினால் பாதிக்கப்பட்ட முதல் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்களை எடுத்துள்ளது. ஸ்டீவ் ஸ்மித் 6 ஓட்டங்களோடும், உஸ்மான் க்வாஜா 4 ஓட்டங்களோடும் களத்தில் இருந்தனர்.

# கண்டி வொரியர்ஸ் அணியின் தலைவர் அஞ்சலோ பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானம்?



இலங்கை கிரிக்கெட் அணி வீரர் அஞ்சலோ பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

31 வயதான அஞ்சலோ பெரேரா இலங்கை அணிக்காக 6 ஒருநாள் மற்றும் 6 ரி-20 போட்டிகளில் மாத்திரமே விளையாடியுள்ள நிலையில், திடீரென இந்த ஓய்வுக்கான தீர்மானத்தை வெளியிட்டுள்ளார். இவர் 2013 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகியிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் இறுதியாக பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில் விளையாடியிருந்தார்.

சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றாலும் உள்ளூர் போட்டிகள் மற்றும் சர்வதேசத்தில் நடைபெறும் லீக் போட்டிகளில் அவர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படும் அதேநேரம், அவர் வெளிநாடொன்றுக்கு குடிபெயரவுள்ளார் எனவும் சில தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் உள்ளூர் போட்டிகளில் அதிகமாக விளையாடியுள்ள இவர், என்.சி.சி கழகத்துக்காக பல வருடங்கள் விளையாடியுள்ளார் என்பதுடன் உள்ளூர் போட்டிகளில் மிக முக்கியமான வீரர்களில் ஒருவராகவும் பார்க்கப்படுகின்றார்.

மொத்தமாக 107 முதற்தர போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 48.08 என்ற ஓட்டச் சராசரியை கொண்டிருப்பதோடு, 150 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் போட்டிகளில் 42 என்ற ஓட்ட சராசரியையும் கொண்டுள்ளார். இவர் இறுதியாக நடைபெற்றுமுடிந்த லங்கா பிரீமியர் லீக்கில் கண்டி வொரியர்ஸ் அணியின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் தற்காலிக பயிற்சியாளராக ருமேஷ் ரத்நாயக்க



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் இலங்கைச் சுற்றுப்பயணத்தின்போது, இலங்கை கிரிக்கெட் அணியின் தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக ருமேஷ் ரத்நாயக்க செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 7ஆம் திகதி இலங்கை வரும் சிம்பாப்வே கிரிக்கெட் அணி, சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஒருநாள் சுப்பர் லீக்கிற்காக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவிருக்கின்றது.

பயிற்சியாளர் மிக்கி ஆர்தரின் பதவிக்காலம் நிறைவடைந்த பின் தலைமைப் பயிற்சியாளர் இன்றியுள்ள இலங்கை கிரிக்கெட் அணிக்கு தற்காலிக தலைமைப் பயிற்சியாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் இலங்கை கிரிக்கெட் உயர் செயற்திறன் நிலையத்தின் பந்துவீச்சுப் பயிற்சியாளருமான ருமேஷ் ரத்நாயக்க நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்.

இதேநேரம் உயர் செயற்திறன் நிலையத்தின் துடுப்பாட்டப் பயிற்சியாளராகவுள்ள ருவின் பீரிஸ், சிம்பாப்வே தொடரின்போது இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் செயற்படவிருக்கின்றார் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இம்மாதம் 16ஆம் திகதி கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நிலையானதொரு பொருளாதார திட்டம் அவசியம்

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்து



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரண விலையில் கோதுமைமா வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நிலையானதொரு பொருளாதாரத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும், கல்வி, விளையாட்டு மற்றும் சுகாதாரத்துறைக்கு இம்முறை மலையகத்தில் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரண விலையில் கோதுமைமா வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானமொன்றை எடுத்துள்ளது. இதன்படி பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பமொன்றுக்கு ஒரு கிலோ 80 ரூபாவுக்கு 15 கிலோ கோதுமை மாவை பெற்றுக்கொள்ள முடியும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள இந்த நிவாரணத்தை நாம் வரவேற்கின்றோம். மக்களுக்கு உரிய வகையில் பங்கீடு இடம்பெறும். அதற்காக ஊழியர்களை நியமிக்கவுள்ளோம்.

நாட்டின் தற்போதைய நிலையில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் தேவைப்படுகின்றது. அதேபோல இடம்பெற்றுள்ள சிற்சில தவறுகளுக்கு ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் கூட்டு பொறுப்பை ஏற்கவேண்டும். அதனைவிடுத்து தனிநபர்மீது பழியை சுமத்த முற்படுவது தவறு. மக்களுக்கு சேவை செய்யவே பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மக்களுக்கு அதனை வழங்குவதற்கே முற்பட வேண்டும். மாறாகக் குறைகூறுவதற்காக மட்டும் மக்கள் எம்மை நாடாளுமன்றம் அனுப்பவில்லை.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் விரைவில் உயர்நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதுவரை பொறுமையாக இருப்போம். கூட்டு ஒப்பந்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். தொழிலாளர்களின் வலி புரியாதவர்களே அரசியல் நோக்கி கூட்டு ஒப்பந்தத்தை விமர்சிக்கின்றனர்.

பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபடுவர்கள் அரச ஊழியர்கள் என சில நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு அல்ல. தனியார் நிறுவனங்களின் கீழ்தான் அவர்கள் பணியாற்றுகின்றனர். எனவே, கம்பனிகள்தான் நிவாரணம் வழங்க வேண்டும். தொழிலாளர்களைச் சுரண்டும் நிறுவனங்கள் அதனை வழங்குமா எனத் தெரியாது.

அதேவேளை, வீதி அபிவிருத்தி உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கடந்தாண்டு கவனம் செலுத்தப்பட்டது. கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டுத் துறைகள் தொடர்பில் இந்த வருடம் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

4 ஆயிரம் இந்திய வீடுகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன. விரைவில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துவோம்.

தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதே மறைந்த எமது தலைவரின் நிலைப்பாடாக உள்ளது. அந்த வகையில் தமிழ் பேசும் கட்சிகளின் முயற்சிக்கு ஆதரவு வழங்கப்படும். கூட்டத்தில் பங்கேற்றால்தான் ஆதரவு என்றில்லை. - என்றார்.

# அமைச்சர்கள் அமைதி காத்தமை ஏன்? தினேஷ் குணவர்த்தனவிற்குப் பயமா?

## ஊடகவியலாளர்களின் சரமாரியான கேள்வி

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று (செவ்வாய்க்கிழமை) கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதில் வழங்குவதை அமைச்சர் தினேஷ் குணவர்தன தவிர்த்தார்.

அரசாங்கத்தால் இவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்க முடியுமா?, பதவி நீக்கம் தொடர்பாக அமைச்சர்கள் அமைதி காத்ததை ஏன்?, அமைச்சர் தினேஷ் குணவர்தனவிற்கு பயமா? என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, இந்த விடயத்தில் தான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் இந்த விடயத்தில் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்படவில்லை என்றும் கூறினார். மேலும் சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கம் தொடர்பான கேள்விக்கு அவரே பதிலளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

# மக்களிடம் சேவைகள் சென்றடையாவிட்டால் எத்தனை வங்கிகள் திறந்தாலும் பயனில்லை!

## எம்.ரமேஸ்வரன் எம்.பி. அறிவுரை

எத்தனை வங்கிகள் திறந்து வைத்தாலும் பயனில்லை மக்களிடம் சேவைகள் சென்றடையாவிட்டால் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியா பகுதியில் சமுர்த்தி வங்கி திறக்கும் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

இங்கு உரையாற்றிய பணிப்பாளர் தெரிவத்தார் 'சமுர்த்தி வங்கியில் நிறைய காசு இருக்கின்றது. அந்த காசு மக்களை சென்றடைய வேண்டும்' என்று அந்த நோக்கம் தான் எமது நோக்கம்.

வங்கி திறப்பது மக்களுக்கு சேவைகள் சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான்.

உங்களுக்கு தெரியும் கடந்த காலங்களில் சமுர்த்தி அரசியல் கட்சி பார்த்து தான் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதனால் கிடைக்க வேண்டிய எத்தனையோ பேருக்கு சமுர்த்தி கிடைக்க வில்லை.

நாங்கள் சமுர்த்தி பெற வேண்டியவர்களின் பட்டியலை தயாரிக்கும் போது 23 ஆயிரம் பேருக்கு பெற்றுக்கொடுக்கவில்லை என்பதைக் கொவிட் கொடுப்பனவு பெற்றுக்கொடுக்க பட்டியல் தயாரிக்கும் போது தெரிந்துக்கொண்டோம்.

அதன் அடிப்படையில் தான் 5 ஆயிரம் பெற்றுக்கொடுத்தோம். நாங்கள் ஏழை மக்களுக்கு உதவிகள் செய்யும் போது கட்சி பார்ப்பதில்லை. அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் மக்களுக்கு இந்த நிதி உதவி பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தான் எதிர்பார்க்கின்றார்.

ஆகவே, எந்நாளும் சமுர்த்தி உதவி பெறும் மக்களாக இருக்கக்கூடாது. இந்த நிதியைக் கொண்டு இவர்கள் வாழ்க்கையில் சுய தொழில் செய்து முன்னேற வேண்டும் என்று எதிர்பார்த்துத் தான் கடந்த வருடமும் இந்த வருடமும் பாரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் ஒவ்வொரு வருடமும் கோடிக் கணக்கான நிதியை சமூகத்துக்காக ஒதுக்கப்படுகின்றது. இது ஏழை மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அந்த நிதியின் மூலம் சுய தொழில் செய்து முன்னேற வேண்டும்.

ஆகவே, இந்த நோக்கம் நிறைவேற வேண்டும். மக்களுக்கு சேவையாற்றும் போது மக்கள் குறை கூறுவார்கள். அதனைப் பொருட்படுத்தாது சமுர்த்தி உத்தியோகஸ்த்தர்கள் சேவையாற்ற வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரம் சேவையாற்றாது பக்கத்தில் உள்ளவர்களையும், இணைத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று சேவையை முன்னெடுத்தார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கணகராஜ், மஸ்கெலியா பிரதேச சபை தலைவி செம்பகவள்ளி, மாவட்டச் செயலாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மன்னார் நகரில் முன்னெடுப்பு!

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ,மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் இணைந்து முன்னெடுக்கும் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மன்னார் பிரதேச வைத்திய அதிகாரி பிரிவில் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டது.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல் மற்றும் அவற்றை அப்புறப்படுத்துதல், அதே நேரம் நுளம்பு பெருக்கத்துக்கு சூழல் காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் முகமாக சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், டெங்கு ஒழிப்பு செயலணி, உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு துறையினர் விசேட கள விஜய செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

அதே நேரம் மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் வைத்தியசாலை பகுதிகளைச் சூழ உள்ள பகுதிகள் இராணுவத்தினரின் உதவியுடன் விசேட சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் இவ்வாரம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணசபைத் தேர்தல் குறித்து கலந்துரையாடப்படவே இல்லை!

## கம்மன்பில தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் எந்தவொரு கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு எந்தவொரு நாடும் அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் அமைச்சர் உதயகம்மன்பில குறிப்பிட்டார்.

திருகோணமலை எண்ணெய் களஞ்சியத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்துடன் மாகாண சபைத் தேர்தலுக்குத் தொடர்பில்லை என்றும் அவர் கூறினார்.

மேலும் இரு நாடுகளுக்கு இடையிலான குறித்த ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திட வாய்ப்புள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.01.2022இல் வெளியிடப்பெற்றது.